10/=
பக்கங்கள் 08
Registered as a Newspaper in Srilanka
# எதிரொலி
குரல் 01 அதிர்வு 215 திங்கட்கிழமை டிசெம்பர் 25 2017




## போர் முடிந்தும் தமிழர்களுக்கு
# இயல்பு வாழ்வு இன்னுமில்லை

### நத்தார் வாழ்த்துச் செய்தியில் யாழ். ஆயர் ஆதங்கம்



"போர் முடிந்தும் மக்களின் இயல்பு வாழ்வை மேம்படுத்துவதில் நல்லெண்ண அரசு வேகமாகச் செயற்படவில்லை. காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், அரசியற் கைதிகள் விடுவிக்கப் படாமை, சொந்த நிலங்களை விடுவிக்காமை போன்ற பல விடயங்கள் இன்னமும் முழுமை பெறவில்லை. போர் முடிந்து பல ஆண்டுகளாகியும் மக்களின் 06




# பதவி பறிக்கப்படவில்லை
## நடராஜன் விளக்கம்



யாழ்ப்பாணம், டிசெ.25

'யாழ்ப்பாணம் துணைத் தூதரகத்தில் இருந்து நான் மீள ழைக்கப்படவில்லை. எனது பணிக்காலம் முடிந்து, நாடு திரும்பியுள்ளேன். இதனையே சிலர் தவறாகப் புரிந்து கொண்டு, என்னை இந்திய வெளியுறவுத் துறை பதவியில் இருந்து நீக்கப் பட்டிருப்பதாக செய்தி வெளியிட்டுள்ளார்கள்" எனத் தெரிவித்துள்ளார் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்தில், துணைத் தூதராக இருந்த ஆ.நடராஜன். 06

# ரஷ்ய–இலங்கை உறவில் குழப்பம்: முத்திரை நிறுத்தம்

கொழும்பு, டிசெ.25

ரஷ்யாவுக்கும், இலங்கைக்குமான இராஜதந்திர உறவுகள் ஏற்படுத்தப்பட்ட 60 ஆவது ஆண்டை முன்னிட்டு, அரசாங்கத்தினால் வெளியிடப்படவிருந்த சிறப்பு முத்திரை வெளியீடு இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் விநியோகிக்கத் திட்டமிடப்பட்டிருந்த இந்த முத்திரையை இடைநிறுத்தி வைக்குமாறு வெளிவிவகார அமைச்சு அறிவுறுத்தியிருப்பதாக அஞ்சல் மா அதிபர் ரோகண அபேரத்ன தெரிவித்தார்.

எனினும், அதற்கான காரணங்களை வெளியிட அவர் மறுத்துள்ளார்.

இலங்கைத் தேயிலைக்கு ரஷ்யா தற்காலிக தடையை விதித்துள்ள நிலையில், இரு தரப்பு 06

# அமெரிக்காவுக்கு இலங்கை 'ஐஸ்'

கொழும்பு, டிசெ.25

ஜெருசலேம் விவகாரம் தொடர்பில் ஐ.நா. பொதுச்சபையில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்ததால், அமெரிக்காவின் நிதியுதவிகள் இலங்கைக்கு நிறுத்தப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. 06

# ஹெகலிய மீண்டும் ஐ.தே.கவுக்கு தாவல்?



கொழும்பு, டிசெ.25

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கெஹலிய ரம்புக்வெல மீண்டும் ஐ.தே.கவில் இணைந்து கொள்ளவுள்ளார் என்று அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது. 06



# ஆற்றில் சிக்குண்டு இரு மாணவர்கள் பலி
## புதுக்குடியிருப்பில் சோகம்

முல்லைத்தீவு, டிசெ.25

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு கேப்பாப்பிலவு வீதியில்உள்ள கள்ளியடி ஆற்றில் குளிக்கசென்ற மாணவர்கள் இருவர் நீரில் மூழ்கி பரிதாபகரமாக உயிரிழந்தனர். 06

# சுற்றுநிருபங்கள் யாவும் இனிமேல் தமிழிலும்!
## கல்வியமைச்சர் கண்டிப்பான உத்தரவு



கொழும்பு, டிசெ.25

கல்வி அமைச்சின் சுற்று நிருபங்கள் இனிமேல் கட்டாயம் தமிழ் மொழியிலும் வெளியிடப் பட வேண்டுமென கல்வி அமைச்சர் அகில விராஜ் 06

# தினகரன் அமோக வெற்றி



சென்னை, டிசெ.25

சென்னை ஆர்.கே.நகர் இடைத்தேர்தலில் சுயேச்சையாக, குக்கர் சின்னத்தில் போட்டியிட்ட டி.டி.வி. தினகரன், 40,707 வாக்குகள் வித்தியாசத்தில் ஆளும் அ.தி.மு.க.வின் வேட்பாளர் மதுசூதனனை வீழ்த்தி அமோக வெற்றி பெற்றார். 06



# மோட்டார் சைக்கிள் தீப்பற்றி இளைஞன் கருகிச் சாவு

வட்டுக்கோட்டை, டிசெ. 25

மின்கம்பத்துடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் ஏற்பட்ட தீயில் இளைஞர் ஒருவர் கருகிப் பலியானார். மற்றொருவர் காயமடைந்தார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை 2 மணியளவில் 06

s.k எஸ்.கே. ரெக்ஸ்

இன்றைய நாகரீகம்
நாளைய சந்ததியினருக்கு...
நவ நாகரீக முறையில்
வடிவமைக்கப்பட்ட
பெண்களுக்கான இறக்குமதி
செய்யப்பட்ட முழுப்பாவாடை,
அரைப்பாவாடை, T. Shirt
கொட்டன் பிளவுஸ்,
கொட்டன் Tops, அலுவலக
பாவாடைகள், பற்றிக் சட்டை வகைகள்
என்பவற்றுக்குநாட வேண்டிய ஒரே இடம்



S.K. Tex
97, பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம்.
0774013976



உங்களுடைய இலக்கங்களை எங்களுக்கு வழங்குங்கள்
உங்களுடைய வியாபாரத்துடன் வாடிக்கையாளர்களை தொடர்புபடுத்துவோம்

பல்வேறு வழிகளில் உங்களின் தகவல்களை அனுப்பலாம்
- த.பெ.எண் 2333 கொழும்பு முகவரிக்கு தபால் அட்டை அனுப்பவும்.
- இ-மெயில் info@rainbowpages.lk
- rainbowpages.lk சென்று Register your business இல் பதிவு செய்யவும்.
- 0712399399 இலக்கத்துக்கு sms,viber or whatsapp இற்கு மெசேஜ் பண்ணவும்
- விபரங்களை 011 2391888 பெக்ஸ் செய்யவும்.

SLT ரெயின்போ பேஜஸில் இலவசமாக பதிவு செய்து வியாபாரத்தை விரிவுபடுத்துங்கள்.
SLT RAINBOW PAGES
Print & Digital Directories
உங்களின் வளமான வியாபாரத்திற்கு கைகொடுக்கும் SLT ரெலிகொம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்



# சாரதி இல்லாமல் ஓடித் திரிந்த பஸ்

வவுனியா,டிசெ.25

வவுனியா, புகையிரத நிலைய வீதியில் சாரதி இன்றி மினிபஸ் ஒன்று ஓடியதால் மக்கள் பதற்றத்துடன் வீதியில் நாலாபுறமும் தப்பி ஓடிய சம்பவம் நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

வவுனியா, புகையிரத நிலைய வீதியில் மினி பஸ் ஒன்றை அரச வங்கி ஒன்றின் முன்னால் நிறுத்தி விட்டு, அதன் சாரதி வங்கிக்குள் சென்றுள்ளார். ஆயினும் சாரதி இல்லாமல் நின்ற அந்த பஸ் தானாக இயங்கி, கார் மற்றும் மோட்டார் சைக்கிள் என்பவற்றுடன் மோதி, விபத்துக்குள்ளானது. அதன் பின்னரும் குறித்த சாரதியில்லாமல் மினிபஸ் வீதியால் ஓடி, மக்களை மோத முயன்றது. இதனால் அச்சத்துடன் மக்கள் சிதறி ஓடினர். எனினும் இதன்போது, எவருக்கும் காயமேதும் ஏற்படவில்லை. இது குறித்து வவுனியாப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)



# தாமரைக் கோபுரம் நத்தார் மரமானது

கொழும்பு,டிசெ.25

நத்தார் தினத்தை முன்னிட்டு கொழும்பில் அமைக்கப்பட்டுள்ள, தாமரைக் கோபுரத்தின் இதழ்கள் பல்வேறுபட்ட வர்ணங்களில் ஒளிரும் வகையில் அலங்காரம் செய்யப்பட்டுள்ளது.

இதற்காக நவீன தொழில்நுட்பத்திலான 27 ஆயிரம் எல்.ஈ.டி மின்குமிழ்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆசியாவின் மிகவும் உயர்ந்த கோபுரமாக தாமரைக் கோபுரம் அமைந்துள்ளது. இதன் காரணமாக ஆசியாவின் உயர்ந்த நத்தார் கோபுரமாக தாமரைக் கோபுரம் சாதனை படைக்கவுள்ளது.

இதேவேளை கடந்த வருடம் நத்தார் பண்டிகையை முன்னிட்டு கொழும்பு காலி முகத்திடலில் உருவாக்கப்பட்ட மிகப் பிரமாண்டமான கிறிஸ்மஸ் மரம் கின்னஸ் சாதனை படைத்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கைலாச பிள்ளையாரில் கஜமுக சங்காரம்



யாழ்ப்பாணம் – நல்லூர் கைலாசபிள்ளையார் ஆலய கஜமுக சங்கார உற்சவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை 4.30 மணியளவில் வெகு விமரிசையாக இடம்பெற்றது. (அ)

## மத்தியஸ்தர் சபை அமர்வு ஜன.13 இல்

யாழ்ப்பாணம், டிசெ.25

எதிர்வரும் ஜனவரி 14 ஆம் திகதி நடைபெறவிருந்த வலி.மேற்கு மத்தியஸ்தர் சபை அமர்வு, தைப்பொங்கல் காரணமாக, குறித்த தினத்துக்கு முதல் நாள் ஜனவரி 13 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## கிணற்றுக்குள் பெண்ணின் சடலம்

கொழும்பு,டிசெ.25

மட்டக்களப்பு - காத்தான்குடி, தாழங்குடாப் பகுதியில் உள்ள வீடொன்றின் கிணற்றிலிருந்து பெண்ணொருவரின் சடலம் நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளது.

கொக்கட்டிச்சோலை முனைக்காடு பகுதியிலிருந்து நேற்றிரவு வீடு திரும்பிய செ.தவமணி(வயது- 61 ) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் சம்பவம் தொடர்பில் ஒருவர் விசாரணைக்காக காத்தான்குடி பொலிஸாரால் அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ)

## காலநிலை சீரின்மை: விமானம் தரையிறக்கம்

கொழும்பு,டிசெ.25

இலங்கையில் இருந்து அபுதாபி நோக்கி பயணித்த ஸ்ரீலங்கன் விமானம் ஒன்று அவசரமாக ஐக்கிய அரபு எமிரேட்ஸில் தரையிறக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அதிக பனிமூட்டத்துடனான சீரற்ற காலநிலை காரணமாக இந்த விமானம் அவசரமாக தரையிறக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# ஈழத்துச் சிதம்பரத்தில் திருவெம்பாவை ஆரம்பம்

யாழ்ப்பாணம்,டிசெ.25

காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் மார்கழித் திருவெம்பாவைத் திருவிழா நேற்றுக் காலை 7 மணிக்கு ஆரம்பமாகியது.

சிவனுக்கு விசேட அபிஷேகம் இடம்பெற்று, அதனைத் தொடர்ந்து ஐயனாருக்கு அபிஷேகம் இடம்பெற்று விசேட பூஜை இடம்பெற்றது.

தொடர்ந்து காலை 10 மணிக்கு மாணிக்கவாசகருக்கு விசேட பூஜை இடம்பெற்று திருவெம்பாவை பாடல் பாடப்பட்டு மாணிக்கவாசகர் வீதியுலா வந்தர்.

அதனைத் தொடர்ந்து மு.ப. 11 மணியளவில் வசந்த மண்டப பூஜை ஆரம்பமாகி நண்பகல் 12 மணியளவில் சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரப் பெருமான் பரிவார மூர்த்திகளுடன் எலி, மயில் , இடப வாகனங்களில் எழுந்தருளி வீதியுலா வந்தார்.



திருவெம்பாவைத் திருவிழாக் காலத்தில், ஈழத்துச்சிதம்பரத்தில் அமைந்துள்ள மாணிக்க வாசகர் மடாலயம்,அறப்பணி நிலையம் ஆகியவற்றில் அடியார்களுக்குத் தினமும் அன்னதானம் வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது. (அ)

# இராணுவ முகாமுக்குள் நிர்வாண இளைஞன்

வவுனியா,டிசெ.25

வவுனியா, மூன்றுமுறிப்பு இராணுவ முகாமுக்கு ஆடையின்றி நிர்வாணமாக புகுந்த இளைஞனால் நேற்றுப் பதற்றம் ஏற்பட்டது.

வவுனியா ஏ-9 வீதியில் அமைந்துள்ள மூன்றுமுறிப்பு இராணுவ முகாமுக்கு முழு நிர்வாணமாக இளைஞரொருவன் நேற்றுத் திடீரெனப் புகுந்துள்ளார். இதனால் குறித்த இளைஞனை இராணுவத்தினர் சுற்றி வளைத்துக் கைது செய்தனர்.

அதன் பின்னர் இராணுவத்தினர் குறித்த இளைஞனுக்கு உடையணிவித்து வவுனியாப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர். எனினும் குறித்த இளைஞன் என்ன காரணத்துக்காக முகாமுக்குள் உள்நுழைந்தார்? எவ்வாறு நுழைந்தார்? என்ற விசாரணைகளை வவுனியாப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். 18 வயதுடைய முகமட் நசீர் என்ற இளைஞனே இவ்வாறு நிர்வாணமாக முகாமுக்குள் நுழைந்ததாகப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். அவர் மனநிலை பாதிக்கப்பட்டவர் எனச் சந்தேகிக்கப்படுகின்றது. (அ)

# அமைச்சருக்குப் பொலிஸ் பதவி



கொழும்பு,டிசெ.25

இராஜாங்க அமைச்சர் பாலித ரங்கே பண்டாரவுக்கு உதவிப் பொலிஸ் அத்தியட்சகராக பதவி உயர்வு வழங்கி, ஓய்வுபெறும் பரிந்துரையை தேசிய பொலிஸ் ஆணைக்குழு முன்வைத்துள்ளது.

கடந்த 2000 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 24ஆம் திகதியில் இருந்து மீண்டும் அவரை சேவையில் இணைத்து, 2000ஆம் ஆண்டு ஒகஸ்ட் 27ஆம் திகதி முதல் அமுலுக்கு வந்த வகையில், உதவி பொலிஸ் அத்தியட்சகர் தரத்துக்கு பதவி உயர்வு வழங்குமாறு , சட்டம், ஒழுங்கு அமைச்சுக்கு பொலிஸ் ஆணைக்குழு அனுப்பி வைக்கப்பட்டுள்ள பரிந்துரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவை எடுத்த கொள்கை ரீதியான தீர்மானத்துக்கு அமைய இந்தப் பரிந்துரை வழங்கப்பட்டுள்ளதுடன் ஆணைக்குழுவின் செயலாளர் நேரடியாக அமைச்சுக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளார்.(அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

எதிரொலி
Ethiroli
திங்கள். 25 டிசெம்பர் 2017 ethirolimedia@gmail.com

## இவர்களா மீட்பர்கள்?

இன்று பாலன் பிறப்பு நாள்.

உலகத்தை உய்விக்க வந்தவராகவும், மக்களின் மீட்பராகவும் கிறிஸ்தவ மக்களால் கொண்டாடப் படுகின்ற இயேசு கிறிஸ்து , எத்தனையோ தடைகளை யும், ஒடுக்குமுறைகளையும் கடந்தே ஜெருசலேம் தொழுவத்தில் பிறந்திருந்தார். இயேசுவை கடவுளா கக் கொள்ளாத ஏனைய மதத்தவர்கள் கூட, அவ ரின் தியாகங்களை நினைவுகூரத் தயங்குவ தில்லை. இயேசு தனியே கடவுளர் மட்டுமல்ல. மிகச் சிறந்த மக்கள் தலைவரும்கூட.

மக்களுக்கான ஒரு தலைவர் எப்படி இருக்க வேண்டும் என்பதை வாழ்விலும், இறப்பிலும் காட்டி யவர் இயேசு. வாழும்போது தன்னால் இயன்றவரை மக்களைத் தேடி அவராகவே சென்றார். அவர்களின் துயரைக் கேட்டறிந்தார். அவற்றுக்கு தன்னால் என்ன தீர்வைக் கொடுக்க முடியுமோ அதனைக் கொடுக்க முனைந்தார். எப்படி மக்கள் வாழ வேண்டும் என்று போதித்தார். பணத்தாசை பிடித்த வர்கள் மக்களின் வாழ்வைச் சீரழிக்க விடாமல் பாதுகாத்தார். தீயவர்களைத் தானே முன்னின்று எதிர்த்தார். கடைசியாக மக்களின் அத்தனை பாவங் களையும் ஒற்றைச் சிலுவை வடிவில் சுமந்து, அறைபட்டு மரித்தார்.

இவையெல்லாம் இன்றைய மக்கள் தலைவர் கள் என்று சொல்லிக் கொள்ளும் எவரிடமும் இல்லை. குறிப்பாகத் தமிழ் அரசியல்வாதிகளிடம் இந்தப் பண்புகள் துளியளவும் இல்லை. இவர்களில் எவரும் மக்களைத் தேடிச் செல்வதில்லை. மக்களே தம்மிடம் வரவேண்டும் என நினைக்கிறார்கள். துன்பப்பட்ட மக்களின் துயரைத் துடைக்காமல், தமக்கு வேண்டப்பட்டவார்களுக்கும், தமக்கும் மட் டுமே எல்லா வசதி வாய்ப்புகளையும் பெருக்கிக் கொள்கிறார்கள். மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வாக எந்தவொரு உருப்படியான யோசனை களையோ, திட்டங்களையோ இதுவரை முன்வைத்த தாகத் தெரியவில்லை. தம் இனத்தை நசுக்கும் அதி கார சக்திகளுக்கு எவ்வளவு முண்டு கொடுக்க முடியுமோ அவ்வளவுக்குத் தாங்கிப் பிடிப்பார்கள். முள்ளிவாய்க்கால் போன்ற பேரவலங்கள் வரும் போது, தங்கள் பாவங்களையும் மக்களின் தலை யில் சுமத்தி விட்டு, ஓடித் தப்பிவிடுவார்கள். இப் பேர்ப்பட்ட அரசியல்வாதிகளைத்தான் எம்முடைய பிரதிநிதிகளாகப் பெறும் பேறு பெற்றுள்ளோம்.

என்னதான் இவர்கள் மக்களை மந்தைகளாக்கி, தங்களை மீட்பர்களாக நினைத்தாலும், கடைசியில் தேர்தல் என்ற ஒன்றுக்காக யாசகர்களாக கூழைக் கும்பிடு போட்டபடி, வாசல் தேடி வருவார்கள். அப் போதுதான் அவர்களுக்கு மக்கள் என்ற சிலர் இருக் கிறார்கள் என்பதும், அவர்களுக்குப் பிரச்சினைகள் இருக்கின்றன என்பதும் தெரியவரும். அதைத் தாங் கள் மக்களின் வாக்குகளின் துணையால் தீர்ப் போம் என்றும் கதையளப்பார்கள். கடைசியில் வாக்கு களை அள்ளிக் கொண்டு பதவிக் கதிரையில் ஏறியதும், எல்லாவற்றையும் மறந்து விடுவார்கள். இவர்கள் எல்லாம் இயேசுவாக –மீட்பராக– இல்லா விட்டாலும் குறைந்தபட்சம் சாதாரண மனிதர்களாக இருந்தாலே போதும், மக்களின் வாழ்வில் சுபீட்சம் ஓரளவுக்கேனும் பிறக்கக்கூடும்.

“உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்”

# வடக்கில் விடுதலைப் புலிகள்: தெற்கில் கூறுவது வதந்தியே

## யாழ். இராணுவத் தளபதி சொல்கிறார்

யாழ்ப்பாணம், டிசெ. 25

வடக்கில் விடுதலைப் புலிகள் மீளெ ழுவதற்கு வாய்ப்பே இல்லை. புலனாய் வுத் தகவல்களும் இதனை உறுதிப்படுத் துகின்றன. இவ்வாறான நிலையில் இன் னொரு போரைப் புலிகள் முன்னெடுப் பர் எனத் தெற்கில் கூறப்படுபவை வெறும் வதந்திகளே.

இவ்வாறு யாழ். மாவட்ட இராணு வத் தளபதி மேஜர் ஜெனரல் டி.டி. யு.கே. ஹெட்டியாராச்சி கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்குஅளித்த நேர்காணலில் தெரிவித்துள்ளார்.

கடந்த சில மதங்களாக “ஆவா” குழு தொடர்பாக அதிகளவில் பேசப் படுகின்றது. அது சில இளைஞர்க ளைக் கொண்ட குழுவே. மது மற்றும் போதைப் பொருள்களுக்கு அடிமையா னவர்களே அதிலுள்ளனர். தென்னிந் தியத் திரைப் படங்களைப் பார்த்து அதில் நடப்பதைப் போன்று நடக்க முற்படுகின்றனர். அவர்களில் பெரும் பான்மையானவர்கள் கைது செய்யப் பட்டு விட்டனர். ஆகவே அக்குழு தொடர்பில் கவலைப்பட எதுவுமில்லை.

அதையும் மீறி போர் ஒன்று ஏற்பட் டால், மிகக் குறுகிய நேரத்தில் அதனை முடிவுக்கு கொண்டு வர முடியும். யாழ்ப் பாணத்தில் - வடக்கில் இராணுவம், கடற்படை, விமானப்படை மற்றும் பொலிஸ் அதற்குத் தயாராகவே உள் ளன.

மேலும், இராணுவத்திடம் இருக் கும் காணிகள் 5 வருடங்களில் விடு விக்கப்படும். அதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.



யாழ்ப்பாணத்தில் இடம்பெயர்ந்த மக்களின் முகாம்கள் இல்லை என்ப தையும் நிலங்களின் உரிமையாளர்கள் காணிகளைப் பெறுவதையும் நாம் உறு திப்படுத்துவோம் எனவும் அவர் தெரி வித்துள்ளார். (ச)

## மீனவர்கள் ஆர்ப்பாட்டம்



யாழ்ப்பாணம்,டிசெ.25

தம்பாட்டியில் அமைக்கப்பட்ட மீன் சந்தையில் கடற்றொழிலாளர்களி டம் புதிதாக அறவிடப்படும் வரியை நிறுத்துமாறு வலியுறுத்தி, ஊர்காவற் றுறை தம்பாட்டி கடற்றொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த கடற்றொழிலா ளர்கள் ஊர்காவற்றுறை பிரதேச சபைக்கு முன்பாக நேற்றுக் காலை முதல் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெ டுத்தனர்.

“தம்பாட்டி கடற்றொழிலாளர் சங்க அங்கத்தவர்களிடம் கொள்வ னவு செய்யப்படும் கடல் உணவு வகைகள், உள்ளூர் சந்தையில் விற் பனை செய்யப்படும். அதன் பின்னர் வரும் மேலதிக கடல் உணவுகளே வெளியிடங்களுக்கு அனுப்பப் படும்.

ஊர்காவற்றுறை பிரதேச சபை யால் தற்போது சந்தை ஒன்று அமைக் கப்பட்டுள்ளது. அந்தச் சந்தையில் வியா பாரத்தில் ஈடுபடுபவர்களிடம் பிர தேச சபையால் வரி அறவிடப்படுகி றது. அதனால் உள்ளூர் கடற்றொழி லாளர்கள் பாதிக்கப்படுகின்றனர்.

எனவே கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தைக் கருத்தில் எடுத்து, வரி அறிவிடுவதை பிரதேச சபை நிறுத்தவேண்டும்” என்று ஆர்ப்பாட் டத்தில் ஈடுபட்டோர் வலியுறுத்தி னர். (அ)

## 600 இடங்களில் இலவச ‘வைபை’

கொழும்பு,டிசெ.25

நாட்டில் புதிதாக 600 இடங்க ளில் ‘வைபை’ வசதிகள் வழங்கப்பட் டுள்ளதாக இலங்கைத் தகவல் தொடர் பாடல் தொழில்நுட்ப முகவர் நிலை யம் அறிவித்துள்ளது.

இதன் மூலம் மேலும் இரண்டு இலட்சத்து 45 பேர் இணைய சேவை யைப் பெற்றுக் கொள்ளவுள்ளனர்.

இணையத்தைப் பயன்படுத்தி அன்றாட வாழ்வின் செயற்பாடுகளை இலகுவாக மேற்கொள்ளும் முயற்சி யின் ஒர் அங்கமாக பொது இடங்க ளில் ‘வைபை’ வசதிகள் வழங்கப்படு கின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

## புதையல் முத்துக்களுடன் 5 சந்தேகநபர்கள் கைது

கொழும்பு,டிசெ.25

புதையல் மூலம் கிடைத்ததாக கூறப்படும் ஒருதொகை முத்துக்களை விற்க முற்பட்ட ஐவர் தம்புள்ள பொலி ஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் இதுபோன்று 420 முத் துக்களை 300 இலட்சத்துக்கு விற்க முற்பட்டதாகப் பொலிஸார் குறிப் பிட்டுள்ளனர்.

இதேவேளை, சந்தேகநபர்களில் மூவர் இராணுவ லான்ஸ் கோப்ரல் கள் எனத் தெரியவந்துள்ளது.

இவர்கள் வியாபாரி ஒருவருக்கு புதையல் மூலம் கிடைத்ததாக கூறப் படும் முத்துக்களை விற்க முற்பட்டுள் ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ)

## வீடற்ற வடக்கு மக்களுக்கு அடுத்த வருடத்தில் தீர்வு

கொழும்பு,டிசெ.25

வடக்கில் நிலவும் வீடமைப்புப் பிரச் சினைக்கு அடுத்த வருடத்தில் தீர்வு பெற்றுக் கொடுக்கப்படும் என்று தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை யின் தலைவர் லக்விஜய சாகர பலன் சூரிய தெரிவித்தார்.

2016 ஆம் ஆண்டு வீடமைப்பு, அபி விருத்தி அதிகாரசபைக்கு முக்கியமான ஆண்டாக அமையும். 2015 ஆம் ஆண்டு முதல் இதுவரையில் 510 வீடமைப்புத் திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள் ளது.

2018 ஆம் ஆண்டில் 600 மாதிரிக் கிராமங்களின் பணிகளை நிறைவு செய் வதே இலக்காகும். இதற்குத் தேவை யான நிதி வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. குறிப் பாக வடக்கில் வீடற்ற மக்களுக்கு 2018ஆம் ஆண்டுக்குள் வீடமைத்துக் கொடுக்க துரித நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது” என்று தெரிவித்தார்.(அ)

## “வியாபாரம் செய்ய அனுமதி தாருங்கள்”

வவுனியா,டிசெ.25

வவுனியா நடமாடும் வியாபார சக வாழ்வு சங்கத்தின் வியாபாரிகள், புதிய பஸ் நிலையத்தில் வியாபாரம் செய்வ தற்கு அனுமதிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

வவுனியாவில் ஏ-9 வீதியில் அமைக் கப்பட்டுள்ள புதிய பஸ் நிலையம் கிறிஸ் மஸ் தினத்தன்று சேவையை ஆரம்பிக் கும் என வடக்கு மாகாண போக்கு வரத்து அமைச்சு அறிவித்துள்ளது. இந்த நிலையில் பஸ்ஸில் ஏறி வியாபா ரம் செய்யும் நடமாடும் வியாபாரிக ளுக்கு புதிய பஸ் நிலைய வளாகத்துக் குள் வியாபாரம் செய்ய பஸ் நிலைய நிர்வாகம் அனுமதி மறுத்துள்ளது.

இந்த நிலையிலேயே புதிய பஸ் நிலையத்தில் வியாபாரம் செய்வதற்கு அனுமதிக்குமாறு, வவுனியா நடமாடும் வியாபார சங்கத்தின் தலைவர் ஆறுமு கம் சிவகுமார் கோரிக்கை விடுத்துள் ளார். (அ)

## இன்று நாளும் கோளும்

25.12.2017 திங்கட்கிழமை ஏவிளம்பி வருடம் மார்கழி மாதம் 10 ஆம் நாள்

ஸப்தமி பி.ப. 10.03 மணி வரை | பூரட்டாதி பி.ப. 09.13 மணி வரை | குளிகை பி.ப. 01.30-03.00

இராகுகாலம் 07.30 - 09.00 | சுபநேரம் மு.ப. 06.15 - 07.15 | எமகண்டம் மு.ப. 10.30 - 12.00

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஜெயம் | முயற்சி | உயர்வு | யோகம் | புகழ் | ஆர்வம் | ஆக்கம் | பாராட்டு | கவனம் | பயம் | இன்பம் | மகிழ்ச்சி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரோஹிதவுக்கு முன்னுரிமை பசில் கடும் அதிருப்தி



கொழும்பு,டிசெ.25

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் உள்ளூராட்சித் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

இந்த நடவடிக்கைகள் மகிந்தவின் புதல்வர்களின் தலைமையில் நடைபெறுவதால் முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ச வருத்தத்தில் உள்ளார் என சிங்கள ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

பத்தரமுல்லை நெலும் மாவத்தையில் அமைந்துள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தலைமையகத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிரசார முன்னாயத்த நடவடிக்கை ஒன்று முன்னெடுக்கப்பட்டது. இதில் மகிந்தவின் புதல்வரான ரோஹித ராஜபக்ச மற்றும் அவருக்கு நெருக்கமானவர்களினால் ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டன.

"பேச்சு போதும் - வேலையை ஆரம்பிப்போம்" என்ற தலைப்பில் அந்த பிரசார மாதிரி தயாரிக்கப்பட்டுள்ளது. அதற்கு மகிந்த ராஜபக்சவும் இணக்கம் தெரிவித்துள்ளார். பசில் ராஜபக்சவினால் இந்த பிரசார நடவடிக்கையை "ட்ரை எட்" உட்பட நாட்டின் பிரதான பிரசார நிறுவனங்களிடம் ஒப்படைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனினும் இதற்கு ரோஹித ராஜபக்ச தலையிட்டிருப்பதும், மகிந்த ராஜபக்சவும் ரோஹித ராஜபக்சவின் தீர்மானத்துக்கு விருப்பம் தெரிவித்திருப்பதும் பசில் ராஜபக்சவுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

2015 தேர்தல் பிரசாரங்களைக் கெடுத்ததும் மகிந்தவின் புதல்வர்கள் தான் எனவும், இந்த முறையும் அவ்வாறு வெற்றியைக் கெடுப்பதற்கே நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக பசில் தனக்கு நெருக்கமானவர்களிடம் தெரிவித்துள்ளார். (அ)

## வெளிநாட்டிலிருந்து நாடு திரும்பியவர் கட்டுநாயக்கவில் கைது

கொழும்பு,டிசெ.25

வெளிநாட்டில் இருந்து இலங்கை திரும்பிய நபர் ஒருவர் நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைய, கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாக விமான நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறித்த நபருக்கு எதிராக தம்புள்ள நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது. ஆயினும் நீதிமன்றத்துக்கு அறிவிக்காமல் குறித்த நபர் வெளிநாடு சென்றமையாலேயே கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் வெளிநாடு சென்றுள்ளதாகத் தகவல் வெளியாகியதனை தொடர்ந்து, அவர் நாடு திரும்பும் போது கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்காக அவர் மீது திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பில் கட்டுநாயக்க விமான நிலைய அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய அவர் நாடு திரும்பிய போது கைது செய்த பொலிஸார் குறித்த நபரை நேற்று மினுவாங்கொட நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.(அ)




## திருகோணமலையில் உணவுக் கண்காட்சி

திருகோணமலை,டிசெ.25

சுவைமிகு பாரம்பரிய உணவுகளின் கண்காட்சி நேற்று முன்தினம் திருகோணமலையில் இடம்பெற்றுள்ளது.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில், திணைக்களத்தின் பணிப்பாளர் வளர்மதி ரவீந்திரன் தலைமையில் திருகோணமலை பெருந்தெரு விக்னேஸ்வரா மகா வித்தியாலய மண்டபத்தில் இந்தக் கண்காட்சி நடைபெற்றுள்ளது.

இந்த நிகழ்வின் அதிதியாக கிழக்கு மாகாணப் பிரதிப் பிரதம செயலாளர் (நிர்வாகம்) ஜே.ஜே.முரளிதரன் கலந்து கொண்டிருந்தார். ஏராளமானோர் இந்தக் கண்காட்சியைப் பார்த்துப் பயன் பெற்றனர். (அ)

# மகிந்த காலக் கொலைகள் அம்பலப்படுத்தும் கையேடு



கொழும்பு,டிசெ.25

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற கொலைகள் தொடாபில் ஜே.வி.பி. கட்சி நூல் ஒன்றை வெளியீடு செய்யவுள்ளது.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை இலக்கு வைத்தே இந்த நூல் வெளியீடு செய்யப்படவுள்ளது. மகிந்த ராஜபக்ச ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற கொலைகள், காணாமல் போதல்கள், ஊடகவியலாளர்கள் கொலைகள், ஊழல் மோசடிகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் அம்பலப்படுத்தும் நோக்கில் இந்தக் கையேடு வடிவிலான நூல் வெளியிடப்பட்டு, பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்படவுள்ளது.

பாரபட்சம் பாராது குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் யார் என்பதனையும் , அந்த நபர்களின் பதவி நிலைகள் தொடர்பிலும் இந்த கையேடு வடிவிலான நூலில் குறிப்பிடுவதற்கு ஜே.வி.பி.யின் அரசியல் சபை தீர்மானித்துள்ளது. (அ)



## இரண்டைக் குடுத்து, நாலு கேள்வியும் கேக்கலாமெல்லே?

எப்ப பேப்பரைப்பாத்தாலும் ஒரு சலிப்புத்தான் வருகிறது. அரசியல் வாதியளின்ரை அரியண்ட கதையளும், அப்பட்டமான பொய்யும், பிரட்டும் என்று எல்லா இடமும் நாறிப்போய் கிடக்கு. அந்த மாதிரி ஆக்களை வைச்சுக் கொண்டு என்ன மாதிரி அரசியல் செய்யப்போகினமெண்டு தெரியேல்லை.

பெரிய சட்டப் படிப்புப் படிச்சவையெல்லாம் பேருக்குப் படிச்சவை மாதிரிக் கிடக்கே ஒழிய விசியத்திலை கோட்டை விட்டிடுகின மெல்லே. இப்ப பாருங்கோ. எலக்ஸன் அறிவிச்சு எத்தினை நாள். கடைசி வரைக்கும் அவைக்குத் தெரியாது ஆர் எலக்ஸன் கேக்கத் தகுதியான ஆக்கள் தங்களிட்டை இருக்கினமெண்டு. அப்பிடி எடுக்கப் போயேக்கையும் ஆயிரம் தலையிடி. அவன் சரியில்லை எண்டு இவன் சொல்ல, அவன் சொல்லுறது பொய் எண்டு அவன் சொல்ல இப்பிடிக் கச்சேரிக்குக் கையொப்பம் வைக்கப் போகும் வரைக்கும் இழுபறியம், சண்டையும், வாக்குவாதமும் எண்டு எல்லாம் அரியண்ட விளையாட்டாத்தானிருந்திது. அதிலையும் ஒரு சூட்சுமத்தைப் பாருங்கோவன்.

தமிழர் விடுதலைக் கூட்டணி சங்கரி எத்தினை காலம் கட்சியிலை இருக்கிது? பொதுவாச் சட்டம், அதுவும் தேர்த்தல் சட்டம் வடிவாத் தெரியவெல்லே வேணும். யாழ்ப்பாணக் கச்சேரியிலை எலக்ஸன் கேக்கிற ஆக்களை தாக்கல் செய்யேக்கை கேக்கிற ஆளே தன்னோடை கேக்கிற 12பேருக்குச் சமாதான நீதவான்னை உறுதிப்படுத்தலைச் செய்திருக்கிறார். எப்பிடி இருக்கு விளையாட்டு. அரிவரிபடிச்சவன் கூட உந்த விளையாட்டைச் செய்யான். உதுகளை நாங்கள் தலைவர்களெண்டு தலையிலை தூக்கி வைச்சுக் கொண்டாடுகிறது எங்கடை பிழையோ இல்லை அவையின்ரை பிழையோ? ஒய்! உங்களைத்தான் ஞாயம் கேக்கிறன்?

அவை மாத்திரமில்லை, எல்லாக் கட்சிக்காரரும் எலக்ஸன் விசியத்திலை கோட்டை விட்ட ஆக்கள் தான். ஏன்! சாவகச்சேரியிலை கெல்மட்டாலை அடிபிடிப்பட்டு ஓட.. ஓட கலைச்சப் பிடிச்சுஞ் சரிவரேல்லை எண்டு, பிறகு கூடப்போன றைவரை கையை முத்து வையெடா எண்டு சொல்ல, அவனும் ஓட..ஓட்டப்போட்டி எல்லே நடந்தது. அது பெரிய பகிடியாப் போச்சுது மட்டுமில்லை பரிகாசமாவும் போச்சுது. முந்தி அரசியல் வாதிக்கு ஒரு மரியாதை இருந்திது. இப்ப ஐஞ்சு சதத்துக்கு ஆக்கள் மதிக்கிறேல்லை. சனமும் நடிச்சுக் கிடிச்சு அவையின்ரை பின்னாலை திரிஞ்சு கிடைக்கிறதை வாங்கப் பழகிவிட்டிதுகள். அரசியல் வாதிக்கும் சூடு சுறணை இல்லை. சனத்துக்கு அதை விடக் கூட இல்லை. அரசியல் வாதியளின்ரை ஊத்தை உடைசலைத் தெரிஞ்சப் பிறகும் கடைசி நேரத்திலை எல்லாத்தையும் மறந்துபோய் அவைக்கத்தான் கீறிப்போட்டு வருவினம்.

இதுவரைக்கும் சொன்னியள் தலைவர் உண்டாக்கின கட்சியை உடையவிடக்குடாது எண்டு. அப்ப தலைவர் தெரிஞ்சதின்ரை நோக்கம் என்னவோ, இப்ப அது இருக்கிற விறுத்தம் என்னவோ. எல்லாந் தலைகீழா வெல்லே கிடக்கு. அதோடை இப்ப அதுக்கை பழைசுகளைக் கானேல்லை. புதுசுகள் கனபேர் வந்திருக்கினம். ஆனபடியால் உந்தப் பழைய உணர்ச்சிப்படுகிற விசியத்தைக் கைவிட்டு விட்டு, நடக்கிறதைப் பாருங்கோவன். வாறவையின்ரை முகறக் கட்டையை வடிவாப் பாருங்கோ. "முயல் பிடிக்கிறதை மூஞ்சையிலை தெரியும்" – எண்டு அப்பு சொல்லுறவர் எல்லே! .

இப்ப நடக்கிற எலக்ஸனிலை தமிழ் வளக்கிறன், தமிழுக்குத் தெண்டா எடுக்கிறன் எண்ட ஆட்கள் தேவை இல்லை. உள்ளூராட்சி சபையளை நல்ல வடிவா, நேர்மையோடை பரிபாலனம் செய்யக் கூடிய ஆக்கள் தேவை. உங்கடை ஊருலகத்துக்குச் செவ்வையா ஏதேன் நல்லது செய்யக் கூடியவை ஆரோ அவைக்குப் புள்ளடியைப் போடுங்கோ. அவை பாளிமெண்டுக்குப் போகப் போறதில்லை எல்லே! இஞ்சை ஊருக்கைதானே சுத்திக்கொண்டு திரிவினம்.. ஒண்டுஞ் செய்யாட்டி சேட்டுக் கொலரிலை பிடிச்சு இரண்டைக் குடுத்து, நாலு கேள்வியும் கேக்கலா மெல்லே?

- வில்லங்கம் விநாசி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பதவி இல்லாவிட்டாலும் மக்கள் சேவை செய்வேன்

## அகிலதாஸ் உறுதி

வடமராட்சி,டிசெ.25

“பதவி இருந்தாலும், இல்லாது போனாலும் எனது மக்களுக்கான பணியினை நான் தொடர்ந்தும் ஆற்றுவேன். மக்கள் பணி செய்வதற்கு பதவிகள் தேவையில்லை. நாட்டின் தேசியக் கட்சியில் இணைந்து கொண்டோ அல்லது மாகாணசபை உறுப்பினராக இருந்து கொண்டோ செய்யாத பல விடயங்களை சாதாரண மனிதனாக இருக்கும் போது செய்தவன் நான்” என வடமாகாண சபை உறுப்பினர் அகிலதாஸ் தெரிவித்துள்ளார்.

கரவெட்டி துன்னாலை காசிநாதர் வித்தியாலயத்தில் நேற்று நடைபெற்ற வருடாந்த பரிசளிப்பு விழா நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

ஆரம்பகாலங்களில் நான் எந்தவித அரசியல் பலமோ அதிகாரங்களோ இல்லாது மக்களின் துன்ப துயரங்களுக்காக குரல்கொடுத்தவன். கரம் கொடுத்தவன். மாகாணசபை உறுப்பினராக வருவதற்கு முன்பதாகவே எனது பணியினை மக்கள்நன்கு அறிந்திருந்தார்கள். மாகாண சபை உறுப்பினர் பதவி ஊடாக மேலும் பல குடும்பங்களுக்கு என்னால் உதவி செய்யக் கூடியதாக இருந்தது. பதவி இருந்தாலும் இல்லாது போனாலும் எனது மக்களுக்கான பணியினை நான் தொடர்ந்தும் ஆற்றுவேன்” என்றும் அவர் தெரிவித்தார்.

பாடசாலை அதிபர் கோ.புஷ்பாகரன் தலைமையில் நடைபெற்ற இந்தப் பரிசளிப்பு நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக மாகாண பிரதி கல்வி பணிப்பாளர் சு.சற்குணராஜா, ஓய்வுநிலை ஆசிரியர் திருமதி ப.வல்லிபுரம், ஆகியோர் உட்பட மாணவர்களும், பெற்றோரும் கலந்துகொண்டனர். (அ-11)

## அந்தநாள் ஞாபகம்



**25.12.2005**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான ஜோசப் பரராஜசிங்கம்(வயது–71), நத்தார் ஆராதனையில் கலந்து கொண்டிருந்த போது, ஆயுததாரிகளால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார்.

# ஜோசப் பரராஜசிங்கத்தின் நினைவேந்தல் இன்று

மட்டக்களப்பு,டிசெ.25

படுகொலை செய்யப்பட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின்12ஆவது நினைவுதினம் இன்று அனுஷ்டிக்கப்படவுள்ளது. மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் அணியின் ஏற்பாட்டில், மட்டக்களப்பு, அரசடி தேவநாயகம் மண்டபத்தில் இளைஞர் அணித் தலைவர் கி.சேயோன் தலைமையில் இன்று மாலை 2 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில், நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்துகொள்ளவுள்ளனர். இதேவேளை, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம், 2005 ஆம் ஆண்டு டிசெம்பர் 24ஆம் திகதி நள்ளிரவு மட்டக்களப்பு புனித மரியாள் தேவாலயத்தில் நத்தார் ஆராதனையில் கலந்துகொண்டிருந்த வேளையில், சுட்டுக் கொல்லப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# வீட்டை உடைத்துக் கொள்ளை: சந்தேக நபர்கள் பிடிபட்டனர்

வடமராட்சி,டிசெ.25

மந்திகை பகுதியில் கடந்த வாரம் வீடு ஒன்றை உடைத்து, கொள்ளையடித்த சந்தேக நபர்கள் இருவரை வல்வெட்டித்துறை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

முதலில் கைதான சந்தேகநபர் இளவாலைப் பகுதியைச் சேர்ந்தவரெனவும், இதற்கு முதலும் இவர் பல குற்றங்களைச் செய்தவர் எனவும் அடையாளப் படுத்தப்பட்டுள்ளார். இவரின் வாக்குமூலத்தை அடுத்து இன்னொரு நபர் கைது செய்ய பட்டுள்ளார் . மேலுமொரு சந்தேக நபரைக் கைது செய்வதற்கும், பருத்தித்துறை நீதிமன்ற நீதிபதி சுபாகரன் நளினியிடம் வல்வெட்டித்துறைப் பொலிஸார் அனுமதி பெற்றுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரையும் எதிர்வரும் 4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார் .(அ-11)



# தங்காலைக் கடலில் மூழ்கி வெளிநாட்டுப் பெண் பலி

கொழும்பு,டிசெ.25

தங்காலை - மாரகொல்லிய பிரதேசத்தில் கடலில் குளித்த 59 வயதான வெளிநாட்டு பெண்ணொருவர் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார். மாரகொல்லிய, கப்புஹேன்வல பிரதேச கடலில் நீராடிக் கொண்டிருந்த போது இந்த வெளிநாட்டுப் பெண் அலையில் இழுத்துச் செல்லப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். உயிர்காக்கும் அணியினர் உடனடியாக மீட்டு தங்காலை வைத்தியசாலையில் அனுமதித்தனர். இருப்பினும் அங்கு அந்தப் பெண் உயிரிழந்துள்ளார். (அ)

# எழுதாரகை வெள்ளோட்டத்தை ஆரம்பித்து வைத்தார் ஆளுநர்

யாழ்ப்பாணம்,டிசெ.25

எழுவைதீவு மற்றும் அனலைதீவு ஆகியவற்றில் வசிக்கும் மக்களின் போக்குவரத்துகாக மத்திய அரசிடமிருந்து பெற்றுக்கொடுக்கப்பட்ட எழுதாரகை எனும் புதிய படகின் வெள்ளோட்டத்தை வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே ஆரம்பித்து வைத்தார்.

132 மில்லியன் ரூபா செலவில் நவீனவசதிகளுடன் இந்தப் புதிய படகு நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் வடமாகாணக் கடற்படைத் தளபதி ஜெயந்தடி சில்வா, அரசாங்க அதிபர் என். வேதநாயகன், ஆளுநரின் செயலாளர் இளங்கோவன், ஊர்காவற்றுறை பிரதேச செயலாளர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன் மற்றும் பல அதிகாரிகளும் பொது மக்களும் கலந்து கொண்டனர். (அ-11)

# வடக்கில் இன்று மழை



கொழும்பு,டிசெ.25

நாட்டின் வடக்கு, கிழக்கு, வட மத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலும் அம்பாந்தோட்டை மாவட்டத்திலும் இன்று ஓரளவு மழைபெய்யும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சப்ரகமுவ மாகாணம், காலி, மாத்தறை, நுவரெலியா மற்றும் களுத்துறை மாவட்டங்களில் பிற்பகல் 2.00 மணியின் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும்.

சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களில் காலை வேளைகளில் பனி மூட்டமான காலநிலை காணப்படும்.

கிழக்கு கடற்கரையோரங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும்.

இடியுடன்கூடிய மழையின்போது தற்காலிகமாக பலத்த காற்று வீசக் கூடும். இடிமின்னலின்போது பொது மக்கள் அவதானமாக செயற்படு மாறு திணைக்களம் கேட்டுக்கொண்டுள்ளது. (அ)

# வேட்புமனுக்கள் மீளாய்வு

கொழும்பு,டிசெ.25

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்களை மீண்டும் பரிசோதிக்கும் பணிகள் தேர்தல்கள் செயலகத்தில் இடம்பெற்று வருவதாகத் தேர்தல்கள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

மாவட்ட செயலகங்களில் கையளிக்கப்பட்ட வேட்புமனுப் பத்திரங்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் தேர்தல்கள் செயலகத்துக்குப் பெறப்பட்டு இந்தப் பரிசீலனை இடம்பெற்று வருகின்றது.

கடந்த வெள்ளிக்கிழமை நான்கு மாவட்டங்களின் வேட்பு மனுக்கள் உதவித் தேர்தல் ஆணையாளர்களினால் தேர்தல்கள் செயலகத்திடம் ஒப்படைக்கப்பட்டன.

நேற்றைய தினம் மேலும் எட்டு மாவட்டங்களின் உறுதிப்படுத்தப்பட்ட வேட்புமனுக்களின் பிரதிகளை உதவித் தேர்தல் ஆணையாளர்கள் எடுத்து வந்ததாகவும் தேர்தல்கள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

இன்றும் நாளையும் பரிசீலனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படும். அதன் பின்னர் வாக்காளர் பத்திரங்களை அச்சிடும் பணி ஆரம்பிக்கப்படவுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர்ச்சிகள்

## இயல்பு... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இயல்பு வாழ்வை மேம்படுத்துவதில் நல்லெண்ண அரசு வேகமாக செயற்படவில்லை" என யாழ். மறை மாவட்ட ஆயர் கலாநிதி யஸ்ரின் பேர்னாட் ஞானப்பிரகாசம் தெரிவித்துள்ளார்.

கிறிஸ்து பிறப்பு விழாவை ஒட்டி யாழ். ஆயர் வெளியிட்டிருக்கும் வாழ்த்துச் செய்தியிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

"கிறிஸ்து பிறப்பு பெருவிழா இன்று கிறிஸ்தவ உலகு மட்டும் கொண்டாடும் ஒரு விழாவாக மட்டும் இல்லாமல் உலக மக்கள் அனைவரும் கொண்டாடும் ஒரு உலகப் பெருவிழாவாக மாறிவிட்டது.

இந்த உலகப் பெருவிழாவைக் கொண்டாடும் அனைவருக்கும் ஆண்டவர் இயேசுவின் பிறப்பு விழா வாழ்த்துக்களை தெரிவிக்கிறோம்.

"உன்னதங்களிலே கடவுளுக்கு மகிமை உண்டாகுக. பூவுலகில் நல்மனது கொண்டோருக்கு அமைதி ஆகுக என வாழ்த்துகிறோம்.

கிறிஸ்து பிறப்பு பெருவிழா ஒரு மகிழ்ச்சியின் விழாவாக இருக்கும் அதேவேளை அது ஒரு அன்புறவின் விழாவாகவும், ஒன்று கூடலின் விழாவாகவும் அமைந்துள்ளது.

கன்னி கருத்தாங்கி ஒரு மகனைப் பெறுவார். அவருக்கு இமானுவேல் என்று பெயரிடுவர். இமானுவேல் என்றால் கடவுள் நம்போடு என்று பொருள்படும் என மத்தேயு நற்செய்தியாளர் (மத்தேயு 1:23) இவ்விழா பற்றி விளக்கம் தருகிறார்.

இதனை நாம் குடும்பமாக - உறவுகளாக - நண்பர்களாக - பங்கு சமூகமாக இணைந்து குதூகலிக்கின்றோம்.

நமது இந்த கிறிஸ்து பிறப்பு பெருவிழாக் கொண்டாட்டங்கள் அனைத்திலும் கடவுள் நம்மோடு இருக்கிறார் என்ற உண்மையை தெளிவாக உணரவேண்டும்.

கடவுள் நம்மோடு இருக்கிறார் என்ற உண்மையை உறுதிப்படுத்தும் அதேவேளை அந்த உண்மையை இவ்விழாவைக் கொண்டாடும் அனைவருக்கும் அறிவிக்க வேண்டும்.

ஆடைகள், அறுசுவை உணவு, பட்டாசு, கோலங்கள், கொண்டாட்டங்கள் என மகிழ்ந்திருக்கும்போது அயல் வீட்டில் இவற்றைப் பெற முடியாதவர்கள் இருக்கிறார்கள் என்பதை மறக்காது பகிரக்கூடியவற்றை அவர்களோடு பகிர்ந்து மகிழ்ச்சியை இரட்டிப்பாக்குவோம்.

இதனிடையே போர் முடிவடைந்து பல வருடங்கள் ஆகின்ற போதும் சொல்லக் கூடிய விதமான முன்னேற்றங்கள் எதுவும் ஏற்பட்டதாக இல்லை.

காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்திற்கு உடன் முடிவு காணப்பட வேண்டும்.

இறந்தவர்களை உயிர்ப்பிக்க முடியாது அதேவேளை உயிரோடு இருப்பவர்களை காலம் காலமாக மறைத்தே வைத்திருக்கவும் முடியாது.

மனித உயிர் சம்பந்தமான இப்பிரச்சினைக்கு இனியும் காலம் தாழ்த்தாது அரசாங்கம் உடன் முடிவு காண வேண்டும்.

இறந்தவர்களுக்கு சமயக் கடமைகளை நிறைவேற்றி உறவுகள் தம் மனசுகளை ஆறுதற்படுத்தவும் இறந்தவர்களுக்கான இறப்பு சான்றிதழைப் பெறவும் இழப்பீடு பெறவும் வழி செய்யப்பட வேண்டும்.

அரசியற் கைதிகளை உடன் விடுதலை செய்யுங்கள், அவர்கள் வாழ்வை சிறைக்கம்பிகளின் பின்னால் இனியும் வீணடிக்காதீர்கள்.

ஏற்கனவே மனதளவில் பாதிக்கப்பட்ட அவர்கள் முழுமையான விடுதலை பெற விரைவாக செயற்படுங்கள் என தமிழ் மக்கள் பெயரால் வேண்டுகிறோம். சொந்த நிலங்களில் மக்கள் சென்று குடியமர்ந்தால்தான் யுத்தம் முடிந்து விட்டதென மக்கள் மன அமைதி கொள்வார்கள்.

மக்கள் குடியிருப்புக்களில் இருந்து இராணுவத்தை முழுமையாக அகற்றுங்கள்.

அவர்களுக்கு அரச காணிகள் நிறையவே உண்டு. போராட்டம் முடிந்தமையால் அவர்கள் தள்ளி இருப்பதே சிறந்தது.

இவற்றை செயற்படுத்த காலம் கடத்துவதால் எதுவும் நடைபெறப் போவதில்லை.

நல்லெண்ண அரசு இந்த அடிப்படை வசதிகளை நேர காலத்தோடு செய்து தமது நல்லெண்ணத்தை வெளிப்படுத்த வேண்டும். இந்த நாட்டில் எதிர் வருங்காலத்தில் அனைத்து இனங்களும் இணைந்தே வாழவேண்டும் என்ற சமாதான சமிக்ஞையை அரசாங்கம் காட்ட வேண்டும். என்றுமில்லாதவாறு புதிய அரசியல் யாப்பு ஒன்றை உருவாக்குவதற்கு நிலைமைகள் சாதகமாக இருப்பதால் தமிழ் மக்களின் நீண்டகால பிரச்சினைக்கு அரசியல் யாப்பில் உறுதிப்படுத்தப்பட்ட தீர்வினைக்காண அரசியலில் சம்மந்தப்பட்ட அனைவரும் அனைத்து வேறுபாடுகளையும் மறந்து உழைக்க வேண்டுமென அன்பாக அழைப்பு விடுக்கிறோம்" என்று யாழ்.மறைமாவட்ட ஆயர் தனது நத்தார் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.(அ)

## அமெரிக்காவுக்கு... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனால் அமெரிக்காவைச் சமாதானப்படுத்தும் நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

குறிப்பாக இலங்கைக்கு உதவி வழங்கு கின்ற நாடுகளில் அமெரிக்கா முதன்மையான நாடாகும். இலங்கையில் முதலீடுகள், வர்த்தகம் மற்றும் அரசின் நடவடிக்கைகளுக்கு உதவும் நிமித்தம் 2017 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் 39.8 மில்லியன் நிதியை அமெரிக்கா ஒதுக்கியது. அர்ப்பணிப்புடனும் ஒத்துழைப்புடனும் இயங்கும் மைத்திரி - ரணில் அரசுக்கு அமெரிக்கா அனைத்து வகையான ஒத்துழைப்பையும் வழங்கும் என தெற்காசிய பிராந்தியத்துக்கான துணைச் செயலாளர் நிஷா பிஸ்வால் தெரிவித்திருந்தார்.

மேலும் கடந்த ஆண்டில் மாத்திரம் அமெரிக்கா பல்வேறு திட்டங்களின் அடிப்படையில் 23.83 மில்லியன் டொலரை உதவியாக வழங்கியிருந்தது.இதனைத் தவிர சர்வதேச நிறுவனங்களிடமிருந்து கடன் மற்றும் செயற்திட்டங்களின் அடிப்படையில் 1562 மில்லியன் டொலர் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு வருடமும் பல்வேறு நோக்கங்களுக்கானநன்கொடை நிதியாக சுமார் 22 மில்லியன் டொலர் வரையில் வழங்கப்படுகின்றது.

இவ்வாறானதொரு நிலையில் ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானங்களின் அடிப்படையில் பலஸ்தீனம் மற்றும் இஸ்ரேல் ஆகிய இரு நாடுகளாலும் ஜெருசலேம் பகிரப்பட வேண்டும் என்ற பலஸ்தீனர்களதும் இஸ்ரேலியர்களதும் நியாயபூர்வமான அக்கறைகளைக் கவனத்திற் கொண்டும் அமெரிக்காவுக்கு அதிருப்தியளிக்கும் வகையில் இலங்கை வாக்களித்தது.

ஜெருசலேம் தொடர்பில் ஐ.நா. தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்தமை அமெரிக்காவுக்கு கோபத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனால் அமெரிக்கா வழங்கும் நிதியுதவியில் பாதிப்பு ஏற்படும் என்ற நிலை உருவெடுத்துள்ளது.

இந்தப் பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்த்துக் கொள்வதற்கு எதிர்காலத்தில் இலங்கை - அமெரிக்காவுக்கு இடையில் புரிந்துணர்வை உறுதிப்படுத்தும் நோக்கில் அரசாங்கம் பேச்சுக்களை ஆரம்பித்துள்ளதாகத் தெரிய வருகிறது.(அ)

## ஆற்றில்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் வணிகப் பிரிவில் கல்வி கற்கும் புதுக்குடியிருப்பு சிவநகரை சேர்ந்த தவராசசிங்கம் தனுசன் (வயது 17) உயிரியல் பிரிவில் கல்வி கற்கும் சிவராசா பகீரதன் (வயது 17) ஆகிய இரண்டு மாணவர்களுமே நீரில் மூழ்கி பலியாகியவர்கள் ஆவர்.

புதுக்குடியிருப்பினை சேர்ந்த 7 இளைஞர்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை நேற்று மதியம் கள்ளியடிப்பகுதியில் உள்ள ஆற்றுக்குச் சென்றுள்ளார்கள். அங்கு குளித்துக் கொண்டிருந்தபோது இருவர் காணாமல் போயுள்ளனர். இதனால் கூட சென்ற நண்பர்கள் நீண்டநேரம் இருவரையும் தேடியுள்ளார்கள்.

இதன் போது அவர்கள் இருவரும் ஆற்றின் சேற்றுப் பகுதியில் புதைந்துள்ளமை தெரியவந்துள்ளது. இதனைத் தொடர்ந்து சம்பவ இடத்துக்கு விரைந்த கிராம மக்கள் துணையுடன் இருவரின் உடல்களும் மீட்கப்பட்டன.

குறிப்பிட்ட ஆற்றுப்பகுதியில் அதிகளவான மண் அகழப்பட்டுள்ளதால், ஆழமான பகுதியாகவும், சேறு நிறைந்த பகுதியாகவும் மாறியுள்ளது. இதனாலேயே சேற்றில் இருவரும் புதைந்துள்ளனர் எனப் பிரதேச மக்கள் தெரிவித்துள்ளார்கள்.

சம்பவ இடத்திற்க விரைந்த புதுக்குடியிருப்பு பொலிஸார் உடல்களை எடுத்து, புதுக்குடியிருப்பு மருத்துவமனையில் ஒப்படைத்தனர்.

உயிரிழந்தவர்களில் ஒருவரான பகீரதன் என்னும் மாணவர் கடந்த வருடம் இடம்பெற்ற க .பொ. த சாதாரண பரீட்சையில் '9 ஏ' சித்திகளைப் பெற்றமாணவர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## ஹெகலிய... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்டியில் எதிர்வரும் ஜனவரி 12ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ள ஐ.தே.க.வின் உள்ளூராட்சித் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில், கெஹலிய ரம்புக்வெல மீண்டும் ஐ.தே.க.வில் இணைந்து கொள்வார் என்றும் கூறப்படுகிறது.

2001-2004 காலப்பகுதியில் ஐ.தே.க. அரசாங்கத்தில் அமைச்சராகப் பதவி வகித்த கெஹலிய ரம்புக்வெல, பின்னர் மகிந்த ராஜபக்ச அரசுக்குத் தாவி அமைச்சுப் பதவியைப் பெற்றார்.

அவர் மகிந்த ராஜபக்ச அரசாங்கத்தில், அரசாங்கப் பேச்சாளராகவும் பதவி வகித்திருந்தார்.

தற்போது மகிந்த ராஜபக்ச ஆதரவான கூட்டு எதிரணியில் உள்ள கெஹலிய ரம்புக்வெல மீண்டும் ஐ.தே.க.வில் இணைந்து கொள்ளவுள்ளதாகவும் அவருக்கு அமைச்சர் பதவி வழங்கப்படவுள்ளதாகவும் கூறப்படுகிறது. (அ)

## சுற்றுநிருபங்கள்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காரியவசம் பணிப்புரை விடுத்துள்ளார். கல்வி அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற சந்திப்பு ஒன்றின் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

"எதிர்வரும் காலங்களில் கல்வி அமைச்சினால் வெளியிடப்படும் சுற்று நிருபங்கள் கட்டாயம் தமிழ் மொழியின் ஊடாகவும் வெளியிடப்பட வேண்டும். தற்போது கல்வி அமைச்சினால் வெளியிடப்படும் சுற்று நிருபங்கள் சிங்கள மொழியில் மட்டுமே வெளியிடப்படுகின்றன. இதனால் தமிழ் மொழிமூலப் பாடசாலைகள் சிரமத்தை எதிர்நோக்க நேரிடுகின்றது.குறிப்பாக வடக்கு, கிழக்கு மற்றும் பெருந்தோட்ட தமிழ் மொழி மூலப் பாடசாலைகளுக்கு சிங்கள மொழி மூலமான சுற்று நிருபங்களை அனுப்பி வைப்பதனால் பல்வேறு சிக்கல்கள் ஏற்படுகின்றன. இந்தச் சிக்கல்களை நிவர்த்தி செய்யும் நோக்கில் தமிழ் மொழியிலேயே சுற்று நிருபங்களை அனுப்பி வைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது" என்றும் அவர் தெரிவித்தார். (அ)

## பதவி... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியத் துணைத்தூதராக இருந்த ஆ.நடராஜன் சில தினங்களுக்கு முன்னர் திடீரென , இந்தியாவுக்குத் திரும்பிச் சென்றார். அவரது பணிகளில் அதிருப்தி ஏற்பட்டதாலேயே, இந்திய வெளியுறவுத்துறை அவரை மீள அழைத்துக் கொண்டதாகத் தகவல்கள் வெளியாகின.

ஆயினும் தன்னுடைய 3 வருட கால பணிக்காலம் முடிந்து, வழமையான நடைமுறையின்படியே இந்தியாவுக்குத் திரும்பியுள்ளதாகவும், ஊடகங்களில் தனது பதவி பறிக்கப்பட்டதாக வெளியான தகவல்களில் உண்மையில்லை எனவும் காணொலி மூலம் ஆ.நடராஜன் தெரிவித்துள்ளார். (அ)

## ரஷ்ய - இலங்கை... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராஜதந்திர உறவுகளில் குழப்ப நிலை ஏற்பட்டுள்ள சூழலிலேயே, சிறப்பு முத்திரை வெளியீடு இடைநிறுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை, இலங்கையுடனான இராஜதந்திர உறவுகள் ஏற்படுத்தப்பட்ட 60 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, இரண்டு முத்திரைகளை ரஷ்யா கடந்த வாரம் வெளியிட்டிருந்தது. (அ)

## தினகரன்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆர்.கே.நகர் தொகுதி இடைத்தேர்தல் டிசம்பர் 21 ஆம் திகதி நடந்து முடிந்தது. இதில் 1,76,885 வாக்குகள் பதிவாகின. 19 சுற்றுகளாக வாக்குகள் எண்ணப்பட்டன.

வாக்கு எண்ணிக்கை முடிவில், சுயேச்சை வேட்பாளர் டிடிவி தினகரன் 89,013 வாக்குகள் பெற்று இடைத் தேர்தலில் வாகை சூடியுள்ளார். 50.32% வாக்குகளை அவர் பெற்றிருக்கிறார்.

அவரைத் தொடர்ந்து அதிமுக வேட்பாளர் மதுசூதனன் 48,306 வாக்குகள் பெற்றுள்ளார். இவரது வாக்கு சதவீதம் 27.31%. திமுக வாக்கு சதவீதம் 13.94% ஆகும்.

கடந்த 2004 ஆம் ஆண்டுக்குப் பின்னர் தமிழகத்தில் இடைத்தேர்தலில் ஆளுங்கட்சி தோல்வியைத் தழுவியிருப்பது இதுவே முதல் முறையாகும். (அ)

## மோட்டார் சைக்கிள்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வட்டுக்கோட்டை - தெல்லிப்பழை வீதியில் அராலி கொட்டைக்காடு வைத்தியசாலைக்கு முன்பாக இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் அராலி மத்தியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான ரவிச்சந்திரன் ரஜீவன் (வயது-26) ஏ்னபவரே பலியானார். அதே இடத்தைச் சேர்ந்த கந்தசாமி யதீசன் என்பவர் காயமடைந்தார்.

மரணச் சடங்குக்கு சென்ற இருவரும் மோட்டார் சைக்கிளில் பயணித்துள்ளனர். வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் மின்கம்பத்துடன் மோதியது.

இந்த விபத்தால் அதனை செலுத்திச் சென்றவர் நினைவிழந்தார். இந்நிலையில் மோட்டார் சைக்கிளின் எரிபொருள் தாங்கி வெடித்துச் சிதறி தீப்பற்றியது.

அப்பகுதியில் நின்றவர்கள் தீயை அணைத்து அவர்களைக் காப்பாற்ற முனைந்தனர். விளாசி எரிந்த தீயால் அவர்களால் ஒருவரை மட்டுமே காப்பாற்ற முடிந்தது. சுய நினைவிழந்த ரஜீவன் தீயில் கருகிப் பலியானார்.

காயமடைந்த நபர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து வட்டுக்கோட்டைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஜய் ரூபானியே மீண்டும் முதல்வர்



குஜராத், டிசெ.25

குஜராத் முதல்வராக விஜய் ரூபானியும் துணை முதல்வராக நிதின் படேலும் நாளை செவ்வாய்க்கிழமை பதவியேற்க உள்ளனர்.

குஜராத் சட்டப்பேரவை தேர்தல் முடிவுகள் கடந்த திங்களன்று வெளியாகின. அங்கு மொத்தமுள்ள 182 தொகுதிகளில் பா.ஜ.க 99 இடங்களிலும், காங்கிரஸ் கூட்டணி 77 இடங்களிலும் வெற்றி பெற்றன. இதைத் தொடர்ந்து குஜராத் மாநில புதிய முதலமைச்சரைத் தேர்வு செய்வதற்காக மேலிடப் பார்வையாளராக மத்திய நிதியமைச்சர் அருண் ஜேட்லி நியமிக்கப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து காந்திநகரில் பா.ஜ.க. எம்.எல்.ஏ.க்கள் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் முதலமைச்சர் விஜய் ரூபானி மீண்டும் முதலமைச்சராகத் தேர்வு செய்யப்பட்டார். நிதின் படேல் துணை முதல்வராகத் தேர்வு செய்யப்பட்டார். இதனை, நிதியமைச்சரும், பாஜக மேலிடப் பொறுப்பாளருமான அருண் ஜேட்லி அறிவித்தார்.

குஜராத் தேர்தலில் பா.ஜ.க வெற்றி பெற்ற போதிலும், அங்கு கடும் சவாலை சந்தித்தது. முதலைச்சர் விஜய் ரூபானி தலைமையிலான அரசு மீது மக்களுக்கு இருந்த அதிருப்தியும் காரணமாக கூறப்பட்டது. இதனால் முதல்வர் விஜய் ரூபானி மாற்றப்பட்டு வேறு ஒருவர் நியமிக்கப்படலாம் என தகவல்கள் வெளியாகிய நிலையில், மீண்டும் விஜய் ரூபானி முதல்வராகத் தேர்வானது குறிப்பிடத்தக்கது. (அ)



# பிலிப்பைன்ஸில் புயல் 200 பேர் பலி: பலர் மாயம்

மணிலா, டிசெ.25

தெற்கு பிலிப்பைன்ஸில் வீசிய 'டெம்பின்' என்னும் வெப்பமண்டலப் புயலால் கிட்டத்தட்ட 200 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் ஏராளமானோர் காணாமல் போயுள்ளனர்.

இந்தப்புயல்பிலிப்பைன்ஸின்மிதனாவோ தீவைத் தாக்கியதுடன் அங்கு வெள்ளத்தையும், நிலச்சரிவையும் ஏற்படுத்தியுள்ளது.

டுபோட் மற்றும் பியகபோ ஆகிய இரு நகரங்களும் மோசமாக பாதிக்கப்பட்டது டன் பல வீடுகள் பாறைகளால் புதையுண்டன.

மணிக்கு 80 கிலோமீற்றர் வரையிலான வேகத்துடன் வீசிய காற்று, மிதனாவோவை கடந்து மேலும் மேற்கு நோக்கி நகரும் முன்பு பலாவான் என்ற பகுதியின் தெற்கு முனையில் மையம் கொண்டுள்ளது.

தற்போது டெம்பின் புயலானது வியட்நாமை நோக்கி மேற்குப்புறமாக நகர்ந்து வருகிறது.

ஐ.நா.வின் பொது செயலாளரான அன்ரனியோ குட்டரஸ், புயலின் காரணமாக ஏற்பட்டுள்ள உயிரிழப்பை எண்ணி தான் வருத்தமடைந்துள்ளதாகவும், மேலும் நிலைமையைச் சமாளிக்க உதவுவதற்கு ஐ.நா. தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். (அ)

# அம்மாவின் வாரிசு நானே

## தினகரன் பெருமிதம்



சென்னை, டிசெ.25

"ஒட்டுமொத்த தமிழக மக்களின் எண்ணத்தையே ஆர்.கே.நகர் மக்கள் பிரதிபலித்திருக்கின்றனர். அம்மாவின் வாரிசாக ஆர்.கே.நகர் மக்கள் தன்னைத் தேர்ந்தெடுத்துள்ளனர்" என ஆர்.கே.நகர் தொகுதியில் வெற்றியீட்டிய டி.டி.வி தினகரன் தெரிவித்தார்.

"ஒட்டுமொத்த தமிழக மக்களின் எண்ணத்தையே ஆர்.கே.நகர் மக்கள் பிரதிபலித்திருக்கின்றனர். தமிழகத்தில் நடைபெறும் மக்கள் விரோத ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவர மக்கள் விரும்புகின்றனர். அதன் எதிரொலியே ஆர்.கே.நகர் மக்களின் முடிவு.

ஆர்.கே.நகரில் இந்த மாபெரும் வெற்றியைத் தந்த ஒன்றரை கோடித் தொண்டர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். தேர்தல் வெற்றிக்காக உழைத்த நிர்வாகிகளுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

வாக்கு எண்ணிக்கை மையத்தில் சிலர் கலாட்டாவில் ஈடுபட்டதாகத் தெரியவந்தது. அவர்கள் தோல்விப் பயத்தில் அவ்வாறு செய்திருக்கின்றனர்" என்றார். (அ)



# வெற்றிவேல் கைதாவார்?

சென்னை, டிசெ.25

தினகரன் ஆதரவாளரான வெற்றிவேல் தாக்கல் செய்த முன்ஜாமீன் மனுவை சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. இதைத் தொடர்ந்து அவரை கைது செய்வது குறித்து பொலிஸ் அதிகாரிகள் ஆலோசனை நடத்தி வருகின்றனர்.

மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா, மருத்துவமனையில் சிகிச்சை பெறுவது தொடர்பான வீடியோவை தினகரனின் ஆதரவாளரான வெற்றிவேல் கடந்த 20 ஆம் திகதி வெளியிட்டார். இது தொடர்பாக ஆர்.கே.நகர் தேர்தல் அதிகாரி கொடுத்த புகாரின்பேரில் வெற்றிவேல் மீது வண்ணாரப்பேட்டை பொலிஸார் வழக்குப் பதிவு செய்தனர்.

இதேபோன்று ஜெயலலிதா மரணம் தொடர்பாக விசாரணை நடத்தி வரும் ஓய்வுபெற்ற நீதிபதி ஆறுமுகசாமி ஆணையத்தின் செயலாளரான பன்னீர்ச்செல்வம் கொடுத்த புகாரின் பேரில் அண்ணா சதுக்கம் பொலிஸாரும் வெற்றிவேல் மீது மற்றொரு வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

இந்நிலையில் தனக்கு முன்ஜாமீன் வழங்கக் கோரி சென்னை மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் வெற்றிவேல் மனுதாக்கல் செய்தார். இந்த மனுவை நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. இதைத் தொடர்ந்து வெற்றிவேலைக் கைது செய்வது குறித்தும் ஆலோசிக்கப்படுகிறது. (அ)



# நாசா வெளியிட்ட அரிய புகைப்படம்

வோஷிங்டன், டிசெ.25

விண்வெளி வீரர் புரூஸ் மெக்கண்டில்ஸை பெருமைப்படுத்தும் வகையில் நாசா அரிய புகைப்படம் ஒன்றை வெளியிட்டுள்ளது

எந்தப் பிடிமானமும் இல்லாமல் சுதந்திரமாக விண்வெளியில் வலம் வந்த முதல் வீரர் என்ற பெருமையைப்பெற்றவர் புரூஸ் மெக்கண்டில்ஸ். இவர் தனது 80 வயதில் கடந்த 21 ஆம் திகதி காலமானார்.

அவரைப் பெருமைப்படுத்தும் விதமாக அவரின் சாதனை நிமிடங்களை நாசா வெளியிட்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக அவர் விண்வெளியில் வலம் வந்த ஒரு புகைப்படத்தை வெளியிட்டு உள்ளது. அவரின் இந்தப் புகைப்படம் விண்வெளி வரலாற்று பக்கங்களில் சிறந்த பக்கமாக அமையும் என்று நாசா புகழாரம் சூட்டியுள்ளது. (அ)

# தனிநாட்டுக்கு மீண்டும் ஆதரவு

கட்டலோனியா, டிசெ.25

கட்டலோனியா நாடாளுமன்றத் தேர்தலில், தனிநாடாகப் பிரிந்து செல்ல வேண்டுமென விரும்பும் தலைவர்களுக்கு வெற்றி கிடைத்துள்ளது,

ஸ்பெயின் நாட்டின் தன்னாட்சி பெற்ற மாகாணம் கட்டலோனியா. இதன் தலைநகர் பார்சிலோனா.

பிராந்திய நாடாளுமன்றத்துக்கு டிசம்பர் 21 ஆம் திகதி தேர்தல் நடத்தப்பட்டது. மொத்தம் உள்ள 135 இடங்களில் தனிநாடு கோருவோர் கட்சிகள் 70 இடங்களில் வெற்றி பெற்றன. இதில், முன்னாள் அதிபர் கார்லஸ்சின் கட்சி தனிப்பெரும் கட்சியாக வந்துள்ளது. இந்தத் தேர்தல் முடிவுகள், தலைமறைவாக உள்ள முன்னாள் அதிபர் கார்லஸ் மீண்டும் ஆட்சி அதிகாரத்துக்கு வருவதற்கான வாய்ப்பாக அமைந்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# மீண்டும் சென்னையில் டோனி, ரெய்னா

சென்னை, டிசெ. 25

சென்னை சுப்பர் கிங்ஸ் அணி டோனி, ரெய்னாவை தக்க வைக்க முடிவு செய்துள்ளது.

11 ஆவது ஐ.பி.எல். தொடருக்கான ஏலம் விரைவில் ஆரம்பமாகவுள்ளது. பங்கேற்கும் ஒவ்வொரு அணியும் தங்களின் பழைய வீரர்களில் மூவரை தக்கவைக்க முடியும்.

இதன்படி இரு வருட தடைக்கு பிறகு சென்னை சுப்பர் கிங்ஸ் அணி களமிறங்கவுள்ளது. தடையின் போது இருந்த வீரர்களை சென்னை, ராஜஸ்தான் அணிகள் தக்க வைக்க முடியும். இதனால் டோனி, ரெய்னாவை தங்கள் அணி தக்க வைக்கும் என சென்னை அணியின் இயக்குநர் ஜோர்ஜ் ஜோன் தெரி வித்துள்ளார்.

எனினும் தாங்கள் தக்கவைக்கப்போகும் மூன்றாவது வீரர் குறித்து அந்த அணி தகவல் வெளியிடவில்லை. அஸ்வின், ஜடேஜா இருவரில் ஒருவர் தக்கவைக்கப்படலாம் என தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச)

# இலங்கையை வெள்ளையடித்தது இந்தியா



இறுதிப் போட்டியையும் 5 விக்கெட்களால் வெற்றி கொண்ட இந்திய அணி இலங்கையை வெள்ளையடிப்புச் செய்தது.

இந்தியா - இலங்கை அணிகளுக்கு இடையிலான இறுதி ருவென்ரி - 20 போட்டி நேற்று மும்பையில் நடந்தது.

நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபட்டது.

தொடக்கம் கொடுத்த டிக்வெல்ல 1, தரங்க 11 என சொதப்ப, டிக்வெல்லவுக்கு பின்னர் வந்த குசல் பெரேரா 4 ஓட்டங்களுடன் ஏமாற்றினார்.

சமரவிக்ரம - குணரட்ண ஜோடி போராடியபோதும், அவர்களால் அதிக நேரம் தாக்குப் பிடிக்க முடியவில்லை. சமரவிக்ரம 21 ஓட்டங்களுடன் வெளியேற, குணரட்ண 36 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். பின்னர் வந்தவர்களில் சானக மட்டும் 2 சிக்ஸர்கள் விளாசி 29 ஓட்டங்களைப் பெற்றார்.

20 ஓவர்கள் நிறைவில் இலங்கை அணி 7 விக்கெட்களை இழந்து 135 ஓட்டங்களைப் பெற்றது.

இந்தியாவின் பந்துவீச்சில், பாண்ட்யா, உனாகட் தலா 2 விக்கெட்களையும், வாசிங்டன் சுந்தர், முஹமட் சிராஜ், யாதவ் ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இலகுவான இலக்கைத் துரத்திய இந்தியஅணிக்கு தொடக்கம் ஏமாற்றம் கொடுத்தது. ராகுல் 4 ஓட்டங்களைப் பெற்ற சமயம் ஆட்டமிழந்தார்.

ரோஹித் சர்மாவுடன் இணைந்த ஸ்ரேயாஸ் ஐயர் நிதானமாக ஆடினார். இந்நிலையில் ரோஹித் 27 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். ஐயரும் பாண்டேவும் சற்று நிலைத்தனர். ஆனால் அவர்களை தனஞ்சய 'ரன் அவுட்' முறையில்பிரித்தார். ஸ்ரேயாஸ்ஐயர் 30 ஓட்டங்களுடன் பெவிலியன் திரும்பினார்.

எனினும் களமிறங்கிய பாண்ட்யா 4, பாண்டே 32 என அடுத்தடுத்து வெளியேற இந்திய அணி ஓட்டங்களை எடுக்கத் தடுமாறியது. ஆனாலும் டினேஸ் கார்த்திக் - டோனி இணை இந்திய அணிக்கு வெற்றியைப் பெற்றுக் கொடுத்தது.

19.2 ஓவர்களில் 5 விக்கெட்களை மட்டும் இழந்து 139 ஓட்டங்களை இந்தியா பெற்றது. கார்த்திக் 18, டோனி 16 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றனர்.

இலங்கையின் பந்து வீச்சில் சமீர, சானக ஆகியோர் தலா 2 விக்கெட்களைக் கைப்பற்றினர். ரி-20 தொடரை 3-0 என்ற கணக்கில் இந்திய அணி கைப்பற்றியது. (ச)

# தென்னாபிரிக்கத் தொடர்: இந்திய அணி அறிவிப்பு

புதுடில்லி, டிசெ. 25

தென்னாபிரிக்கத் தொடரின் ஒருநாள் போட்டிக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்வுக்கு செல்லும் இந்திய அணி வரும் மாதம் 3 டெஸ்ட், 6 ஒருநாள், 3 ரி -20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடவுள்ளது.

இந்நிலையில் 6 ஒருநாள் போட்டிகளுக்கான அணியை இந்திய கிரிக்கெட் அணி தெரிவுக் குழு தலைவர் எம்.எஸ்.கே. பிரசாத் மும்பையில் நேற்றுமுன்தினம் அறிவித்தார்.

இதில், ஷர்துல் தாக்குர், முஹமட் ஷமி, கேதவ் ஜாதவ் ஆகியோருக்கு மீண்டும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. 17 பேர் கொண்ட அணியின் விவரம் வருமாறு,

**அணி விவரம் :** விராட் கோலி (தலைவர்), ரோஹித் சர்மா (உப தலைவர்), ஷிகர் தவான், அஜிங்க்ய ரஹானே, ஸ்ரேயஸ் ஐயர், மணிஷ் பண்டே, கேதர் ஜாதவ், தினேஷ் கார்த்திக், எம்.எஸ். டோனி (விக்கெட் காப்பாளர்), அக்சர் பட்டேல், யுவேந்திர சாஹல், குல்தீப் யாதவ், ஜஸ்பிரீத் பும்ரா, புவனேஸ்வர் குமார், ஹர்திக் பாண்டியா, முஹமட் ஷமி, ஷர்துல் தாக்குர்.



# நியூசிலாந்து இமாலய வெற்றி!

கிறைஸ்ட்சர்ஸ், டிசெ. 25

போல்ட் அபாரமாகப் பந்துவீசி 7 விக்கெட்களைக் கைப்பற்ற, மேற்கிந்தியத் தீவுகளை வீழ்த்தி தொடரைக் கைப்பற்றியது நியூசிலாந்து அணி.

மேற்கிந்தியத் தீவுகள் அணி நியூசிலாந்தில் கிரிக்கெட் தொடரில் விளையாடி வருகின்றது. முதல் போட்டியை நியூசிலாந்து கைப்பற்றிய நிலையில் நிலையில் நேற்று முன்தினம் கிறைஸ்ட்சர்ஸில் இரண்டாவது ஒருநாள் ஆட்டம் நடந்தது.

முதலில் விளையாடிய நியூஸிலாந்து 50 ஓவர்களில் 6 விக்கெட்களை இழந்து, 325 ஓட்டங்களைக் குவித்தது. பின்னர் ஆடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 121 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் பறிகொடுத்தது.

முன்னதாக ஆடிய நியூசிலாந்துக்கு வொர்க்கர் 58, ரோஸ் ரெய்லர் 57, கலின் முன்ரோ 30, ரொம் லேத்தம் 20 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

நிக்கல்ஸ் அற்புமாக ஆடி 83 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழக்காமல் இருந்தார். இதேபோல ருத் அஸ்டேரல் 49 ஓட்டங்களை சேர்த்தார். இவர்களின் அபார ஆட்டத்தால் நியூசிலாந்து அணி 50 ஓவர்களில் 325 ஓட்டங்களைக் குவித்தது. மேற்கிந்தியத் தீவுகளின் கட்ரல் 3 விக்கெட்களைக் கைப்பற்றினர்.

கடினமான வெற்றி இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடியது மேற்கிந்தியத் தீவுகள். ஆனால் எந்த வீரரும் நிலைத்து ஆடவில்லை. வருவதும் போவதுமாக இருந்தனர். நர்ஸ் மட்டும் அதிகமாக 27 ஓட்டங்களை எடுத்தார். இறுதியில் 28 ஓவர்களில் 121 ஓட்டங்களுக்குச் சுருண்டது மேற்கிந்தியத் தீவுகள்.

நியூசிலாந்தின் டிரென்ட் போல்ட் அபாரமாக பந்துவீசி 34 ஓட்டங்களைக் கொடுத்து 7 விக்கெட்களைச் சாய்த்தார். ஒரு நாள் போட்டிகளில் போல்ட்டின் சிறந்த பந்துவீச்சு இதுதான். ஆட்டநாயகன் விருதையும் அவரே தட்டிச் சென்றார். பெர்குஸன் 3 விக்கெட்களைக் கைப்பற்றினார்.

நியூசிலாந்து பெற்ற இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட தொடரை 2-0 என்ற கணக்கில் அந்த அணி வென்றுள்ளது. (ச)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 25.12.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.